செ.வெ.எண். 10/மார்ச் நாள்: 06.03.2017

## தருமபுரி மாவட்டம்

## மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பயனாளிகளுக்கு ரூ. 1 இலட்சத்து 15 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே. விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.




தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கட்டிடத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று (06.03.2017) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பொதுமக்கள் கோரிக்கை மனுக்களாக மேல்நிலைத் தொட்டி அமைத்தல், புதிய ஆழ்துளை கிணறு, தகனமேடை, குடிநீர் வசதி, மின் வசதி, பட்டா வேண்டுதல், கல்வி உதவி தொகை, தரைமட்ட பாலம், மூன்று சக்கர வண்டி, ஓய்வூதிய தொகை, பசுமை வீடு, பட்டா மற்றும் சிட்டா பெயர் மாற்றம், வாரிசு சான்றிதழ், ஜாதி சான்றிதழ், பேருந்து வசதி, குழந்தைகள் நல மையம், வேலைவாய்ப்பு, கல்வி உதவித்தொகை, இலவச தையல் இயந்திரம், சலவைப்பெட்டி மற்றும் வீட்டுமனை பட்டா உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் மனுக்கள் என மொத்தம் 420 மனுக்களை பெற்று சம்மந்தப்பட்ட துறை அலுவலரிடம் வழங்கி உடனடி தீர்வு காண வேண்டுமென அறிவுறுத்தினார்.

**முன்னதாக தொழிலாளர் நலத்துறையின் சார்பில் உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகளையும் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் வங்கி கடன் மானியம் 11 நபர்களுக்கும் மற்றும் சக்கர நாற்காலி 1 பயனாளிக்கு ரூ. 5 ஆயிரத்து 400 /- மதிப்பிலும் என மொத்தம் 12 பயனாளிகளுக்கு ரூ. 1 இலட்சத்து 15 ஆயிரத்து 400/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் மாவட்ட ஆட்சியர் திரு. கே.விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.சங்கர், தனி துணை ஆட்சியர் (ச.பா.தி) திரு. குப்புசாமி, பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு. பஷீர் அகமது, மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு. மகிழ்நன் உட்பட துறை ரீதியான அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தருமபுரி.